©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 8.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 216A] சென்னை, சனிக்கிழமை, ஜூலை 8, 2017
ஆனி 24, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2048


## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

பக்கங்கள்

**சட்டமுன்வடிவுகள்:–**


எண் 28/2017—சென்னை பல்கலைக் கழக (திருத்தச்) சட்டம் .. .. .. 2–6

எண் 29/2017—தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் (திருத்தச்) சட்டம் .. 7–22

2017—ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 8—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2017.**

**1923ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு**

இந்த சட்டமுன்வடிவானது இந்தியக் குடியரசின் அறுபத்தெட்டாவது ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டமானது, 2017 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வரும்.

11ஆம் பிரிவின் திருத்தம்.

**2.** 1923 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவுக்குப்பதிலாக, அதற்கான வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும். (தமிழ்நாடு சட்டம் VII/1923.)

"(2) (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு—

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும் உச்சநீதி மன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை,

(ii) ஆட்சிப் பேரவையினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளருமான ஒருவரை மற்றும்

(iii) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளருமான ஒருவரைக் கொண்டது ஆகும் .

**விளக்கம்.—** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, "சிறந்த கல்வியாளர்" என்பது,—

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்டுள்ள பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்,—

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருத்தல் வேண்டும்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தரை கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(2-B) வேந்தரால், ஆட்சிப்பேரவையினால் மற்றும் ஆட்சிக்குழுவினால் அந்தக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறு மாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) இந்தக்குழுவானது, தன்னுடைய பரிந்துரையை அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்கு அனுப்புதல் வேண்டும். அந்தக்குழு மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக் குழுவானது தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கலாம்.''

**நோக்க – காரண விளக்கவுரை**

தற்போது, 1923ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் VII/1923), தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கும் துணை வேந்தருக்கும் தகுதி எதுவும் வகுத்துரைக்கப்படவில்லை. மேலும், துணை வேந்தரை நியமிப்பதற்கும் துணை வேந்தராக நியமனம் செய்வதற்கான தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப் பட்டியலை தயாரிப்பதற்கும் கால வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே, மேற்சொன்ன நோக்கங்களுக்காக குறிப்பான வகைமுறைகளைச் செய்யும் பொருட்டு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் VII/1923 என்ற சட்டத்தைத் தகுந்த முறையில் திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. அன்பழகன்,**
*உயர் கல்வித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய விவரக் குறிப்பு**

இந்தச் சட்ட முன்வடிவின் **2**ஆம் கூறினால் புகுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள, **1923**ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் VII/1923) **11** ஆம் பிரிவின் **(2–**A) (ii) உட்பிரிவானது, அதனில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு ஆணை பிறப்பிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.

**2.** ஒப்படைவுச் செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தது அல்ல.

**கே.பி. அன்பழகன்,**
*உயர் கல்வித் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 8–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2017.**

**தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு**

இந்தியக் குடியரசின் அறுபத்தெட்டாம் ஆண்டு தமிழ்நாடு மாநில சட்டமன்ற பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**பகுதி–I**

**முன்னுரையாக**

**1.** (1) இந்தச்சட்டம், 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) சட்டம் என்று அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, 2017 மே 27 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**பகுதி–II**

**1965 ஆம் ஆண்டு மதுரை–காமராசர் பல்கலைக்கழகச்சட்டத்தின் திருத்தம்**

தமிழ்நாடு சட்டம் 33/1965 **2.** 1965 ஆம் ஆண்டு மதுரை–காமராசர் பல்கலைக்கழகச்சட்டத்தின் 11 ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவுக்குப்பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– 11ஆம் பிரிவிற்கான திருத்தம்.

‘‘(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு–

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும் உச்சநீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் எதனின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை;

(ii) ஆட்சிப் பேரவையினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை; மற்றும்

(iii) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரைக் கொண்டது ஆகும் .

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, “சிறந்த கல்வியாளர்’’ என்பது,–

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்–

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) வேந்தரால், ஆட்சிப்பேரவை மற்றும் ஆட்சிக்குழுவால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறு மாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலுமான கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.''.

**பகுதி–III**

**1978ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்**

11ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** 1978ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவுக்குப்பதிலாக, அதற்கான வரம்புரைகள் உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்பட்டன, அவையாவன:– தமிழ்நாடு சட்டம் 30/1978

''(2).(1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு,–

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும் உச்சநீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் எதனின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளராக இருக்கும் ஒருவரை;

(ii) அரசினால் நியமிக்கப்படுபவரும் அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணி புரியும் அலுவலராக இருப்பவருமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளராக இருக்கும் ஒருவரை; மற்றும்

(iii) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரைக் கொண்டது ஆகும் .

**விளக்கம்,–** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ''சிறந்த கல்வியாளர்'' என்பது,–

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்–

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) வேந்தரால், அரசு மற்றும் ஆட்சிக் குழுவினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறுமாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.''.

## பகுதி– IV

## 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 1/1982

**4.** 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச்சட்டத்தின் 12 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவுக்குப்பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– 12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

''(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு,–

(i) அரசினால் நியமிக்கப்படுபவரும் அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணி புரியும் அலுவலராக இருப்பவருமான ஒருவரை, அல்லது சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை;

(ii) ஆட்சிப் பேரவையினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை; மற்றும்

(iii) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும் சிறந்த கல்வியாளருமான ஒருவரைக் கொண்டது ஆகும் .

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ''சிறந்த கல்வியாளர்'' என்பது–

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால் அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்–

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) அரசு, ஆட்சிப் பேரவை மற்றும் ஆட்சிக்குழுவினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறுமாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். அந்த குழு மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர், அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் வழங்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.''

## பகுதி–V

## 1981ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்

12ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 2/1982

**5.** 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் திருத்தம் 12 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக, அதற்குரிய வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

''(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு,–

(i) அரசினால் நியமிக்கப்படுபவரும் அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணி புரியும் அலுவலராக இருப்பவருமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளருமான ஒருவரை;

(ii) ஆட்சிப்பேரவையினால் நியமிக்கப்படுபவரும் சிறந்த கல்வியாளருமான ஒருவரை; மற்றும்

(iii) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரைக் கொண்டது ஆகும் .

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ''சிறந்த கல்வியாளர்'' என்பது,–

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற ; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்—

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) அரசினால், ஆட்சிப்பேரவை மற்றும் ஆட்சிக்குழுவினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறுமாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். அந்தக்குழு மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

**6.** ஐயங்களை நீக்குவதற்காக, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தம்) அவசரச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்பு, அந்தக்குழுவிற்கு ஆட்சிக்குழுவினால் அல்லது ஆட்சிப் பேரவையினால் நியமனம் செய்யப்படும் உறுப்பினர் மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறு, 1981ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 12 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதிகளை உடையவராக இல்லாதிருப்பாரானால், அவர் அத்தகைய உறுப்பினராக இருப்பதினின்றும் நீங்கியதின் பேரில் மற்றும் அவருடைய இடத்தில் ஆட்சிக்குழு அல்லது, ஆட்சிப்பேரவை, நேர்வுக்கேற்ப, மேற்சொன்ன இந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறு, 1981ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 12ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதிகளையுடைய புதிய உறுப்பினரை நியமித்தல் வேண்டும். ஐயங்களை நீக்குதல்

**பகுதி–VI**

## 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்

தமிழ்நாடு சட்டம் 15/1984

**7.** 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் திருத்தம் 12ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவுக்குப்பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:— 12ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு,—

(i) அரசினால் நியமிக்கப்படுபவரும், முதல்வராக குறைந்தது ஐந்தாண்டுகள் பணிபுரிந்துள்ளவருமான மகளிர் கல்லூரியில் பணிபுரிந்து வருபவரும் ஒருவரை;

(ii) கல்விக் குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த மகளிர் கல்வியாளராகவும் இருக்கும் ஒருவரை; மற்றும்

(iii) நிருவாக மன்றத்தினால் நியமிக்கப்படுபவர், சிறந்த மகளிர் கல்வியாளராக இருக்கிற ஒருவரைக் கொண்டது ஆகும்.

**விளக்கம்.—**இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, “சிறந்த மகளிர் கல்வியாளர்” என்பது ,—

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்—

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) அரசினால், கல்விக்குழு மற்றும் நிருவாக மன்றத்தினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறுமாதங்களில் தொடங்குதல் வேண்டும். மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.''.

### பகுதி–VII

### 1985ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்

13ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**8.** 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்தின் 13ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக, அதற்குரிய வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– தமிழ்நாடு சட்டம் 23/1985

''(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு––

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும் உச்சநீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் எதனின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை;

(ii) அரசினால் நியமிக்கப்படுபவரும், அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமான ஒருவரை; அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை;

(iii) ஆட்சிப் பேரவையினால் நியமிக்கப்படுபவரும் சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை; மற்றும்

(iv) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான இருவரைக் கொண்டது ஆகும் .

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ‘‘சிறந்த கல்வியாளர்’’ என்பது,–

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்:–

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) வேந்தரால், அரசினால், ஆட்சிப்பேரவை மற்றும் ஆட்சிக்குழுவினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறுமாதங்களில் தொடங்குதல் வேண்டும். மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.’’.

## பகுதி–VIII

## 1990 ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்

தமிழ்நாடு சட்டம் 31/1990.

11ஆம் பிரிவிற்கான திருத்தம்.

9. 1990 ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவு, அதன் வரம்புரை உள்ளடங்கலாக அவற்றிற்கு பின் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

‘‘(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு–

(i) அரசினால் நியமிக்கப்படுபவரும் அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமான ஒருவரை; அல்லது சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை,

(ii)ஆட்சிப் பேரவையினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை ; மற்றும்

(iii) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும் சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரைக் கொண்டது ஆகும்.

**விளக்கம்.—** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ''சிறந்த கல்வியாளர்'' என்பது,—

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற ; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்—

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) அரசினால், ஆட்சிப்பேரவை மற்றும் ஆட்சிக்குழுவினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறுமாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலுமான கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.'.

## பகுதி—IX

### 1997 ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்

12ம் பிரிவிற்கான திருத்தம்.

**10.** 1997 ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவுக்கு, அதன் வரம்புரை உள்ளடங்கலாக பின் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:— தமிழ்நாடு சட்டம் 45/1997.

“(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு –

(i) அரசினால் நியமிக்கப்படுபவரும் அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை;

(ii) ஆட்சிப் பேரவையினால் நியமிக்கப்படுபவரும் சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை; மற்றும்

(iii) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரைக் கொண்டது ஆகும் .

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, “சிறந்த கல்வியாளர்” என்பது,–

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள ; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற ;அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்–

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) அரசினால், ஆட்சிப்பேரவை மற்றும் ஆட்சிக்குழுவினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறு மாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.’.

ஐயங்களை நீக்குதல்

**11.** ஐயங்களை நீக்குவதற்காக, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) அவசரச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்பு, அந்தக்குழுவிற்கு ஆட்சிக்குழுவினால் அல்லது ஆட்சிப் பேரவையினால் நியமனம் செய்யப்படும் உறுப்பினர், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறு, 1997ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 45/1997) 12 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்

குறித்துரைக்கப்பட்ட தகுதிகளை உடையவராக இல்லாதிருப்பாரானால், அவர் அத்தகைய உறுப்பினராக இருப்பதினின்றும் நீங்கியதின்பேரில் மற்றும் அவருடைய இடத்தில் ஆட்சிக்குழு அல்லது ஆட்சிப்பேரவை, நேர்வுக்கேற்ப, மேற்சொன்ன இந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறு, 1997ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 45/1997) 12ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதிகளையுடைய புதிய உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

**பகுதி–X**

**2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்**

10ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 27/2002

**12.** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகச்சட்டத்தின் 10 ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவுக்குப்பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

"(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு,–

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும் உச்சநீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் எதனின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை;

(ii) அரசினால் நியமிக்கப்படுபவரும், அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமாக ஒருவரை; அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை; மற்றும்

(iii) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரைக் கொண்டது ஆகும் .

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, "சிறந்த கல்வியாளர்" என்பது,–

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்–

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) வேந்தரால், அரசினால் மற்றும் ஆட்சிக்குழுவினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறு மாதங்களில் தொடங்குதல் வேண்டும். மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.''.

## பகுதி–XI

## 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்

தமிழ்நாடு சட்டம் 32/2002

**13.** 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச்சட்டத்தின் 12 ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவுக்குப்பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– 12ம் பிரிவிற்கான திருத்தம்.

''(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு–

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும், உச்சநீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் எதனின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை;

(ii) அரசினால் நியமிக்கப்படுபவரும், அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமாக ஒருவரை; அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை, மற்றும்

(iii) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரைக் கொண்டது ஆகும்.

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ''சிறந்த கல்வியாளர்'' என்பது–

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள ; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்–

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) வேந்தரால், அரசினால் மற்றும் ஆட்சிக்குழுவினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம்

நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறு மாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும். (2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.''.

### பகுதி–XII

## 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்

10 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 33/2008

**14.** 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச்சட்டத்தின் 10 ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவுக்குப்பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

''(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு–

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும் உச்சநீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் எதனின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை;

(ii) அரசினால் நியமிக்கப்படுபவரும், அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமாக ஒருவரை; அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை, மற்றும்

(iii) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரைக் கொண்டது ஆகும் .

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ''சிறந்த கல்வியாளர்'' என்பது–

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற ; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்–

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) வேந்தரால், அரசினால் மற்றும் ஆட்சிக்குழுவினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறு மாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.''.

## பகுதி–XIII

## 2013ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்

தமிழ்நாடு சட்டம் 20/2013

**15.** 2013ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச்சட்டத்தின் 9 ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவுக்குப்பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– 9ஆம் பிரிவிற்கான திருத்தம்.

''(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு,–

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும் உச்சநீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் எதனின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை;

(ii) அரசினால் நியமிக்கப்படுபவரும், அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமாக ஒருவரை; அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை, மற்றும்

(iii) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரைக் கொண்டது ஆகும் .

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ''சிறந்த கல்வியாளர்'' என்பது,–

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால் அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்,–

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) வேந்தரால், அரசினால் மற்றும் ஆட்சிக்குழுவினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறு மாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.'.

நீக்கறவு மற்றும் காப்பு

**16.** (1) 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள்(திருத்தம்) அவசரச்சட்டம் இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2017

(2) அத்தகைய நீக்கறவு இருந்தபோதிலும், மேற்சொன்ன அவசரச்சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட மாறான 1965ஆம் ஆண்டு மதுரை–காமராசர் பல்கலைக்கழகச்சட்டம், 1978ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச்சட்டம், 1981ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச்சட்டம், 1981ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச்சட்டம், 1984ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச்சட்டம், 1985ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச்சட்டம், 1990 ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச்சட்டம், 1997 ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச்சட்டம், 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகச்சட்டம், 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச்சட்டம், 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச்சட்டம் மற்றும் 2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச்சட்டம் ஆகியவற்றின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறான அந்தந்த சட்டங்களின்படி செய்யப்பட்டவையாக அல்லது எடுக்கப்பட்டவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 33/1965.
தமிழ்நாடு சட்டம் 30/1978.
தமிழ்நாடு சட்டம் 1/1982.
தமிழ்நாடு சட்டம் 2/1982.
தமிழ்நாடு சட்டம் 15/1984.
தமிழ்நாடு சட்டம் 23/1985.
தமிழ்நாடு சட்டம் 31/1990.
தமிழ்நாடு சட்டம் 45/1997.
தமிழ்நாடு சட்டம் 27/2002
தமிழ்நாடு சட்டம் 32/2002
தமிழ்நாடு சட்டம் 33/2008
தமிழ்நாடு சட்டம் 20/2013

**நோக்க – காரண விவரவுரை**

தற்போது, 1965ஆம் ஆண்டு மதுரை–காமராசர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/1965), 1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1978), 1981ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1982), 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1982), 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1984), 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 23/1985), 1990 ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1990), 1997 ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1997), 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/2002), 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2002), 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/2008) மற்றும் 2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/2013) ஆகிய சட்டங்களில், தேர்வுக் குழு உறுப்பினர்களுக்கும் துணைவேந்தருக்கும் தகுதி எதுவும் வகுத்துரைக்கப்படவில்லை. மேலும், துணைவேந்தர் நியமனத்திற்காக தேர்வுக் குழுவினால் வேந்தருக்குப் பரிந்துரை செய்வதற்கும், துணைவேந்தராக நியமனம் செய்வதற்கும், பொருத்தமான நபர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிப்பதற்கும் கால வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே, மேற்சொன்ன நோக்கங்களுக்காக குறிப்பிட்ட வகைமுறைகளைச் செய்வதற்கு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டங்களைத் தகுந்த முறையில் திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

**2.** அதன்படியே, 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்த) அவசரச்சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2017) ஆளுநரால் 2017, மே மாதம் 27ஆம் நாளன்று சாற்றம் செய்யப்பட்டது மற்றும் அது 2017, மே 27ஆம் தேதியிடப்பட்ட ***தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்*** வெளியிடப்பட்டது.

**3.** இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்தை மாற்றீடு செய்ய விழைகிறது.

**கே.பி.அன்பழகன்,**
*உயர் கல்வித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

1965ஆம் ஆண்டு மதுரை–காமராசர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1965) 11ஆம் பிரிவின் (2–A)(ii) உட்பிரிவு, 1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 11ஆம் பிரிவின் (2–A)(ii) உட்பிரிவு, 1981ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1982) 12ஆம் பிரிவின் (2–A)(ii) உட்பிரிவு, 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 2/1982) 12ஆம் பிரிவின் (2–A)(ii) உட்பிரிவு, 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 12ஆம் பிரிவின் (2–A)(ii) உட்பிரிவு, 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 13ஆம் பிரிவின் (2–A)(ii) உட்பிரிவு, 1990 ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1990) 11ஆம் பிரிவின் (2–A)(ii) உட்பிரிவு, 1997 ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 45/1997) 12ஆம் பிரிவின் (2–A)(ii) உட்பிரிவு, 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2002) 10ஆம் பிரிவின் (2–A)(ii) உட்பிரிவு, 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2002) 12ஆம் பிரிவின் (2–A)(ii) உட்பிரிவு, 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/2008) 10ஆம் பிரிவின் (2–A)(ii) உட்பிரிவு மற்றும் 2013 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2013) 9ஆம் பிரிவின் (2–A)(ii) உட்பிரிவு ஆகியவை இந்தச்சட்ட முன்வடிவின் முறையே 2,3,4,5,7,8,9,10,12,13,14 மற்றும் 15 ஆகிய கூறுகளில் பதிலாக அமைக்கப்பட கருதப்பட்டுள்ளவை. அவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு ஆணை வெளியிடுவதற்கு அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**கே.பி.அன்பழகன்,**
*உயர் கல்வித் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.